## உதவி அமர்வு நீதிமன்றம், கோவில்பட்டி.

## SC No :200/2020

| | | |
|---|---|---|
| பெயர் | .. | செண்பகையா (அசா1) |
| த/பெ. க/பெ | .. | |
| கிராமம் | .. | |
| தாலுகா | .. | |
| தொழில் | .. | |
| வயது | .. | |

1873 ம் வருடத்திய இந்திய சாட்சிய சட்டத்தின் பிரகாரம்2025 ஆண்டு டிசம்பர் மாதம் 15 ம் நாள் இந்நீதிமன்ற உதவியாளர் கார்த்திகா அவர்களால் மேற்படியாரிடம் சத்திய பிரமாணம் பெறப்பட்டது.

15.12.2025

**எதிரி ஆஜர் படுத்தப்பட்டார்.எதிரி தரப்பு வழக்கறிஞர் ஆஜர்.**

**<u>முதல் விசாரணை:</u>**

ஆஜர் எதிரி எனது மகன் ஆவார். நான் கெச்சிலாபுரத்தில் வசித்து வருகிறேன். ஆஜர் எதிரி 15.02.2019 தேதியில் திருச்சியில் வசித்து வந்தார். 19.02.2019 தேதியில் என்ன நடந்தது என்றால் எதுவும் நடக்கவில்லை. வழக்கு சம்பவத்தைப் பற்றிஎனக்கு எதுவும் தெரியாது. என்னிடம் காட்டப்படும் புகார் மனுவில் உள்ள கையொப்பம் என்னுடையது கிடையாது. போலிசார் என்னை விசாரிக்கவே இல்லை.

**<u>பிறழ்சாட்சி:</u>**

அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை பிறழ்சாட்சியாக கருதியதால் அரசு தரப்பு வழக்கறிஞர் சாட்சியை குறுக்குவிசாரணை செய்ய அனுமதி கோரி அனுமதி வழங்கப்பட்டது.

**<u>அரசு தரப்பில் குறுக்கு விசாரணை:</u>**

போலீஸ் என்னை விசாரித்ததாகவும், போலீஸ் விசாரணையில் கடந்த 19.02.2019 ஆம் தேதி காலை 8 மணிக்கு எதிரி என் வீட்டு முன்பு கையில் அருவாளுடன் வந்து என்னைப் பார்த்து கெட்ட வார்த்தைகளால் திட்டி ஒழுங்காக சொத்தைப் பிரித்து தர மாட்டியா என கூறி கையில் வைத்திருந்த அருவாளால் எனது கழுத்தைப் பார்த்து எறிந்தார் என்றும் நான் குனிந்து கொண்டதால் அந்த அருவாள் என் மீது படவில்லை. அவ்வாறு அருவாள் என் மீது பட்டிருந்தால் என் கழுத்து வெட்டுபட்டு நான்

இறந்திருப்பேன் எனவும் அதைப் பார்த்துக்கொண்டிருந்த எனது மனைவி ஜெகதீஷ்வரி , மகள் முருகேஷ்வரி, எனது மருமகன் ராஜசேகர், 2 வது மகன் அழகர்சாமி ஆகியோர் எதிரியை சத்தம் போடவும் எதிரி என்னைப் பார்த்து இன்றைக்கு தப்பித்துக்கொண்டாய் என்றைக்கு இருந்தாலும் என்னால்தான் உனக்கு சாவு என கூறி மிரட்டி விட்டு அங்கிருந்து சென்றுவிட்டார் என்றும் எனக்கு உயிர் பயம் வந்துவிட்டதால் காவல் நிலையத்தில் புகார் மனு கொடுத்தேன் என்றும் எதிரி எனது மகன் என்பதால் வழக்கு சம்பவத்தை மறைத்து என் மகனுக்காக பொய் சாட்சியம் அளிக்கிறேன் என்றாலும் சரியல்ல.

**குறுக்கு விசாரணை:** எதிரி தரப்பில் இல்லை.

(ஒம்) D. மாரிக்காளை, B.Sc.,M.L.,

சார்பு நீதிபதி,
கோவில்பட்டி.